LIBRARY
Eastern University, Sri Lanka

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதல் கலைமாணித் தேர்வு 1999/2000 (வெளிவாரி)
(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

# CC 105 இலங்கைக் கற்கைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (அ) 'சமூக அடுக்கமைவு' என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

(ஆ) வர்க்க ரீதியான அடுக்கமைவு, சாதி ரீதியான அடுக்கமைவு என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

02. சமூகமாற்றம் என்பது எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை ஆதாரங்களுடன் விளக்குக.

03. (அ) 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியல் திட்டத்தில், ஜனாதிபதியின் நிர்வாக அதிகாரங்களைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) தற்பொழுது (2003) ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரி தலைமையிலான அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி, இலங்கை அரசியலில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என நீர் கருதுகின்றீர்? உமது விடையை பரிசிலிக்குக.

04. "இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதில் சர்வதேச நாடுகள் கூடியளவு அக்கறை காட்டுகின்றன." இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடையை மிக நுணக்கமாக பரிசீலிக்குக.

05. (அ) பாரம்பரிய வாழ்வாதார விவசாயத்தின் பிரதான பண்புகள் யாவை?

(ஆ) இலங்கையில் பாரம்பரிய விவசாயத்தை அபிவிருத்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குக.

06. (அ) குடித்தொகைப் பரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

(ஆ) இலங்கையின் குடித்தொகையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கான காரணங்கள் யாவை? அவற்றுள் ஏதாவது ஒன்றை விளக்குக.

07. "கடந்த இரு தசாப்தங்களிலும் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு குறிப்பிடத்தக்க மாற்றத்தினைப் பெற்றுள்ளது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

08. (அ) இலங்கையில், பொருளாதாரமற்ற முயற்சியில் ஈடுபடுவோர் யார்?

(ஆ) தொழில்படை என்பதற்குள் உள்ளடக்கப்படும் பிரிவினர் யார்?

(இ) தொழில் வாய்ப்பு என்ற எண்ணக்கருவினை விளக்குக.

(ஈ) இலங்கையில் ஆண்களை விட பெண்களின் தொழில் வாய்ப்பு வீதம் அதிகரித்து வருவதற்கான காரணங்கள் யாவை?

09. இலங்கை மக்களின், நுண்கலைக்கும் மதத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை, இலங்கையில் பயில் நிலையிலுள்ள ஏதாவது ஒரு மதத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

10. நவீன இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள், இலங்கைப் பண்பாட்டில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தாக்கங்களை விபரிக்குக.

11. இலங்கைத் தமிழரின், அல்லது சிங்களவரின் வரலாற்றின் முக்கிய காலகட்டங்களாக எவற்றைக் கருதுவீர்? ஆதாரங்களுடன் விளக்குக.

********